**4156** **MAY 2011**

தாள் I — சைவ சித்தாந்த வரலாறு

---

Time : Three hours Maximum : 100 marks

கட்டுரை வடிவில் எவையேனும் ஐந்தனுக்கு விடை தருக.

1. சிவ வழிபாட்டின் கூறுகள் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் விரவிக் காணப்படுகின்றன என்பதைச் சான்றுடன் விளக்குக.

2. பிராமணங்களில் உருத்திர கடவுள் பெற்ற முக்கியத்துவம் என்ன?

3. மூவர் முதலிகளின் கொடையை சுருக்கியுரைக்க.

4. சைவ சித்தாந்தம் : சொல்லும் பொருளும் வளர்ந்த விதத்தை எடுத்துரைக்க.

5. திருவுந்தியார்க்கு விளக்கமாக திருக்களிற்றுப்படியார் விளங்குமாற்றை எடுத்துரைக்க.

6. தமிழ்ச் சான்றோராகிய மெய்கண்டார் சைவ சித்தாந்த உண்மைகளை பன்னிரெண்டு சூத்திரங்களாக அமைத்துத் தருமாற்றை உரைக்க.

7. சிவஞான சித்தியாரின் சுபக்கம் ஒரு தனி நூலாகச் சிறந்து விளங்குமாற்றை எடுத்துரைக்க.

8. உமாபதி சிவத்தின் சிவப்பிரகாசம் ஒரு சார்பு நூலாக விளங்குமாற்றைக் கூறு.

9. சைவ மடங்களில் குன்றக்குடி மடம் சமுதாய சமயப்பணிகளை இரு கண்களாகப் போற்றிச் செயல்படுமாற்றை விளக்கியுரைக்க.

10. "பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சைவ சித்தாந்த அறிஞர்களில் ஆறுமுக நாவலருக்கு பெரும் இடமுண்டு" — கருத்துரைக்க.

---

4157

**MAY 2011**

## Paper II — பக்தி இலக்கியம்

Time : Three hours                Maximum : 100 marks

எவையேனும் ஐந்தனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

1. திருஞான சம்பந்தரின் வாழ்வைக் கூறி திருநீற்றுப் பெருமைகளாக அவர் கூறியவற்றை எடுத்துரை.

2. அப்பர் என்றழைக்கப்படும் திருநாவுக்கரசரின் சிறப்புகளைக் கூறுக.

3. சுந்தரரின் பக்திப்பயண அனுபவங்களைக் கூறு.

4. மாணிக்க வாசகப் பெருமானின் பெருமைகளைக் கூறி, “மெய்யுணர்தல்” வழிப்புலனாகும் முப்பொருள் உண்மைகள உரை .

5. ‘நெஞ்சிற்கு அறிவுறுத்தும்’ திருச்சதகச் செய்திகளை எடுத்துரைக்க.

6. ‘சுட்டறுத்தல்’ பகுதியினை சுருங்கக்கூறி பேரின்பக் கடலில் மூழ்கிய திறத்தை உரை.

7. சவம் போன்ற மனதை நோக்கி உரைக்கும் ஆத்தும சுத்திச் செய்திகளைக் கூறு.

8. மாணிக்க வாசகர் கைமாறாக எதைக் கொடுத்தார்?

9. திருவெம்பாவையின் சிறப்பினைக் கூறு.

10. திருமூலர் முதல் தந்திரத்தில் உரைப்பன என்ன?